APPOLO STUDY CENTRE

# TNPSC GROUP I / II - PRELIMINARY

## உள்ளாட்சி நிர்வாகம் - பஞ்சாயத்து ராஜ் - தமிழ்நாடு

- ‘இந்தியாவில் ‘பஞ்சாயத்து ராஜ்’ என்ற சொல், தல சுயாட்சியைக் குறிக்கிறது. இது புல்லிதழ் குடியாட்சியை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இது கிராமப்புற மேம்பாட்டிற்காக தோற்றுவிக்கப்பட்டது. இது 73வது மற்றும் 74வது சட்டத்திருத்தங்கள் மூலமாக அரசியலமைப்பில் இணைக்கப்பட்டது.

**இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி:**

**பண்டைய இந்தியா**

கி.மு. (பொ.ஆ.மு) 600 முதல் கி.பி. (பொ.ஆ) 600 வரை உலகில் பல குடியரசுகள் தோன்றுவதும் மறைவதுமாக இருந்தன. இந்த காலத்தில் தான் சமண மதத்தை தோற்றுவித்த மகாவீரர், புத்த மதத்தை தோற்றுவித்த கௌதம புத்தர் போன்றோர் தோன்றினர். புத்த மற்றும் சமண இலக்கியங்களில், கிராமங்கள் அளவு மற்றும் வாழும் முறையால் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

புத்தர் மற்றும் மகாவீரர் ஏற்படுத்திய மத அமைப்புகளில் மக்களாட்சி நடைமுறையில் முடிவுகள் எடுக்கப்பட்டன. கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தில் அப்போதைய கிராம நிர்வாகம் பற்றி விரிவாக விளக்கப்படுள்ளது. மௌரியர்களின் ஆட்சி காலத்தில் கிராமமும், மாவட்டமுமே நிர்வாக அலகுகளாக இருந்தன.

**தென்னிந்திய தீபகற்பம்**

தென்னிந்திய தீபகற்பத்தில் கிறித்துவின் காலத்திற்கு முன்பே உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்பட்டு வந்துள்ளன. இந்த வரலாற்று காலம் முந்தைய சோழர் காலம், களப்பிரர்கள் காலம் மற்றும் பிந்தைய சோழர் காலம், விஜயநகர பேரரசின் தோற்றம், இஸ்லாமியர்கள், மொகலாயர்கள் மற்றும் ஆங்கிலேயர்களின் வருகை என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவின் கடைக்கோடியில் ஆட்சி புரிந்த பாண்டியர்கள் காலத்திலும், தென் மத்திய இந்தியாவில் ஆட்சி புரிந்த பல்லவர் காலத்திலும் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. மேலும் சோழர்கள் காலத்தில் உள்ளாட்சி அரசாங்கங்கள் நன்கு மேம்பட்ட நிலையில் செயல்பட்டு வந்துள்ளன. காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் கண்டெடுக்கப்பட்ட முதலாம் பராந்தக சோழன் கால கல்வெட்டுகள் (கி.பி. (பொ.ஆ) 919 கி.பி (பொ.ஆ) 922) உள்ளாட்சி அரசாங்கங்கள் பற்றி விரிவாக விளக்குகின்றன. ஒவ்வோர் ஊரிலும் ஒரு சபை இருந்ததாகவும், அதில் அவ்வூரின் அனைத்து ஆண்களும் உறுப்பினராக இருந்ததையும், அவர்கள் அனைத்து பொதுப்பிரச்சனைகளிலும் முடிவெடுத்ததையும் இக்கல்வெட்டுகள் மூலமாக அறிய முடிகிறது. இந்த சபைகள் ”ஊர்” மற்றும் ”மகா சபை” என்று இரண்டு விதங்களாக அழைக்கப்பட்டன.

மேலும் மூன்றாவது வகையாக நகரம் என்று வியாபார மையங்களும், நான்காவது நாடு என்றும் அழைக்கப்பட்டன. இவற்றில் நாடு என்பது கிராமங்கள் மற்றும் மற்ற பகுதிகளை உள்ளடக்கிய அமைப்பாகவும், நகரம் என்பது நகரப்பகுதிகளை உள்ளடக்கிய ஓர் அமைப்பாகவும் இருந்தன. மகாசபைகள் மற்றும் குடவோலை முறை பிராமண குடியிருப்புகளில் மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தன.

## இடைக்கால இந்தியா

மொகலாயர்கள் காலத்தில் (கி.பி. (பொ.ஆ) 1500 முதல் கி.பி. (பொ.ஆ) 1777) அரசுகள் மாறினாலும், மத்திய அரசுக்கும் உள்ளூர் நிர்வாகத்துக்குமிடையேயான உறவில் அடிப்படை விதிகள் மாறவில்லை. மொகலாய பேரரசு அதன் உச்சத்தில் இருந்தபோது, அது பல மாகாணங்களாக (சுபா) பிரிக்கப்பட்டிருந்தது. மாகாணங்களில் உட்பிரிவுகள் (சர்க்கார்) ஏற்படுத்தப்பட்டிருந்தன. சர்க்கார்கள் பல கிராமங்களை கொண்ட தொகுதிகளாக (பரகானா) பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு படிநிலையிலும் அரசாங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதற்கென அதிகாரிகள் பேரரசால் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## தற்கால இந்தியா – சுதந்திரத்திற்கு முன்

- கல்கத்தா (கொல்கத்தா 1725) பம்பாய் (மும்பை 1726) மற்றும் மெட்ராஸ் (சென்னை 1687-88) நகரங்களில், மாநகராட்சி நிர்வாகத்தை ஏற்படுத்தியது ஆங்கிலேயர் ஆட்சியின் ஒரு முக்கியமான நிகழ்வாக கருதப்படுகிறது.

- வங்காள மக்கள் சட்டம் 1842

- மேயோ பிரபுவின் நிதி பங்கீடு தீர்மானம் 1870

- ரிப்பன் பிரபு தீர்மானம் - உள்ளாட்சி அரசாங்கத்தின் மகாசாசனம், 1882

  ஏறத்தாழ 500 உள்ளாட்சி அமைப்புகள் மூன்றில் இரண்டு பங்கு அதிகாரிகளல்லாதோரை கொண்டு தொடங்கப்பட்டன. அவர்களின் பெயர்களை மாவட்ட ஆட்சியர் பரிந்துரைத்தார். எனவே ரிப்பன் பிரபு தல சுயாட்சியின் தந்தை அழைக்கப்படுகிறார்.

- உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்க இராயல் குழு (1907), ஹாப் ஹவுஸ் தலைமையிலான இக்குழு 1909இல் தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

- படைவீரர் குடியிருப்புச் சட்டம், 1924

## தற்கால இந்தியா சுதந்திரத்திற்குப் பின்

- சரத்து 40: ”அரசு கிராம பஞ்சாயத்துகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவைகள் சுய ஆட்சியின் அலகுகளாக பணிபுரிய தேவையான அதிகாரங்களையும், திறனையும் வழங்க வேண்டும்” என அரசியலமைப்பு சரத்து 40 கூறுகிறது.

- சமூக மேம்பாட்டு திட்டம் 1952
  இதன் முக்கிய நோக்கமாக மக்களின் கூட்டு முயற்சியின் மூலம் கிராமங்களின் சமூக பொருளாதார மாற்றத்தை உறுதி செய்வதாகும்.

- தேசிய விரிவாக்கப் பணி 1953


APOLLO STUDY CENTRE

அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அறிவை விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் ஊரக கைவினை தொழில்களில் புகுத்துவது இதன் நோக்கமாக இருந்தது.

**பல்வந்த்ராய் மேத்தா குழு, 1957**

❖ முதல் ஐந்தாண்டு திட்டக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சமுதாய வளர்ச்சித் திட்டம் (1952), தேசிய விரிவுப் பணித்திட்டம் (1953) எவ்வாறு செயல்படுகின்றன என்பதை ஆய்வு செய்வதற்காக நடுவண் அரசு 1957 ஜனவரி மாதம் பல்வந்த்ராய் மேத்தா (Balwantrai Gopaljee Mehta) வின் தலைமையில் ஒரு குழுவை (Team for the Study of Community Projects and National Extension Service) அமைத்தது. இக்குழுவின் அறிக்கை அக்டோபர் 1957ல் சமர்ப்பிக்கப்பட்டது.

❖ இக்குழு “மக்களாட்சி பரவலாக்குதல்” கொள்கையை பரிந்துரை செய்தது.

**பல்வந்த்ராய் மேத்தா குழுவின் பரிந்துரைகள்:**

❖ கிராமத்திலிருந்து மாவட்டம் வரை மூன்றடுக்கு தல தன்னாட்சி அமைப்பு (Three – tier structure of Local self-Government) உருவாக்கப்பட வேண்டும். கிராம அளவில் பஞ்சாயத்து. வட்ட அளவில் பஞ்சாயத்து சமிதி மற்றும் மாவட்ட அளவில் ஜில்லா பரிஷத் என்று பரிந்துரைக்கப்பட்டது.

❖ பஞ்சாயத்து ராஜ்யத்தை தோற்றுவித்த முதல் மாநிலம் இராஜஸ்தான் ஆகும். அக்டோபர் 2, 1959 அன்று அப்போதைய பிரதமர் நேருவால் நாகவுர் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. 2009ஆம் ஆண்டு இதன் பொன்விழா ஆண்டு கொண்டாடப்பட்டது.

❖ இராஜஸ்தானைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேசம் இம்மூன்றடுக்கு முறையை 1959இல் அறிமுகப்படுத்தியது.

**பஞ்சாயத்து ராஜ்யம் தொடர்பான ஆய்வுக்குழு / ஆணையங்கள்**

| ஆண்டு | குழு | தலைவர் |
|---|---|---|
| 1960 | பஞ்சாயத்து புள்ளிவிவரங்களை சீரமைக்கும் குழு | வி.ஆர். ராவ் |
| 1961 | பஞ்சாயத்து மற்றும் கூட்டுறவுகளுக்கான செயற்குழு | எஸ்.டி. மிஸ்ரா |
| 1961 | பஞ்சாயத்து ராஜ் நிர்வாகத்தின் மீதான ஆய்வுக்குழு | வி.ஈஸ்வரன் |
| 1962 | நியாய பஞ்சாயத்துக்களின் மீதான ஆய்வுக்குழு | ஜி.ஆர். இராஜகோபால் |
| 1963 | பஞ்சாயத்து ராஜ் இயக்கத்தில் கிராம சபையின் நிலை மீதான ஆய்வுக்குழு | ஆர்.ஆர். திவாகர் |
| 1963 | பஞ்சாயத்து ராஜ் நிர்வாகங்களின் வரவு செலவு மற்றும் கணக்குகள் மீதான ஆய்வுக்குழு | எம். இராம கிருஷ்ணய்யா |
| 1963 | பஞ்சாயத்து ராஜ் நிதிகளின் மீதான | கே. சந்தானம் |

| | | |
|---|---|---|
| | ஆய்வுக்குழு | |
| 1965 | பஞ்சாயத்து ராஜ் தேர்தல்களின் மீதான குழு | கே. சுந்தானம் |
| 1965 | பஞ்சாயத்து ராஜ்ஜிய உறுப்புகளின் கணக்கு மற்றும் தணிக்கைகள் | ஆர்.கே. கண்ணா |
| 1966 | பஞ்சாயத்து ராஜ் பயிற்சி மையங்கள் மீதான குழு | ஜி. இராமச்சந்திரன் |
| 1969 | அடிப்படை நில சீர்திருத்தங்களை செயல்படுத்துவதில் சமூக மேம்பாட்டு நிறுவனம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் | வி. இராமநாதன் |
| 1972 | சமூக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் மீதான ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தை வடிவமைப்பதற்கான செயற்குழு | என். இராம கிருஷ்ணய்யா |
| 1976 | சமூக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் மீதான குழு | திருமதி. தயா செளபே |

**அசோக் மேத்தா குழு:**

- 20 ஆண்டு கால கிராமப்புற வளர்ச்சியை ஆராய்வதற்காக மற்றொரு மேத்தா குழு 1977 டிசம்பர் மாதம் அமைக்கப்பட்டது. இக்குழுவின் தலைவர் அசோக் மேத்தா (Asoka Mehta).
- பஞ்சாயத்து அமைப்பை புதுப்பிக்கவும் வலிமைப்படுத்தவும் 132 பரிந்துரைகளை ஆகஸ்ட் 1978இல் இக்குழு தாக்கல் செய்தது.

**அசோக் மேத்தா குழுவின் பரிந்துரைகள்:**

- மூன்று அடுக்கு பஞ்சாயத்து இராஜ்ய முறைக்கு பதில் இரண்டு அடுக்கு முறை அமைக்கப்பட வேண்டும். மாவட்ட அளவில் மாவட்ட மன்றமும் (Zila Parishad) அதற்குக் கீழ் நிலையில் மண்டல் பஞ்சாயத்தும் (Mandal Panchayat) இருக்க வேண்டும். மண்டல பஞ்சாயத்தில் மொத்த மக்கள் தொகை 15,000 முதல் 20,000 வரை ஆகும்.

- நியாயப் பஞ்சாயத்துக்கள் (Nyaya Panchayat) தனியே அமைக்கப்பட வேண்டும். இவற்றுக்கு உள்ளாட்சி நிறுவனங்களுக்குமிடையே தொடர்பு இருக்கலாகாது. தகுதி பெற்ற நீதிபதிகள் தலைமையில் நியாயப் பஞ்சாயத்துக்கள் செயல்பட வேண்டும்.

- பஞ்சாயத்து அமைப்பு அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

- கர்நாடகா, மேற்கு வங்காளம் மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்கள், பஞ்சாயத்து அமைப்புகளைப் புத்துயிரூட்ட அகோக் மேத்த குழவின் பரிந்துரைகளின் படி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டன.

**ஹனுமந்த ராவ் - குழுவின் மாவட்ட திட்டமிடல் அறிக்கை 1984**

- ❖ ஹனுமந்த ராவ் குழுவானது மாவட்ட ஆட்சியர் அல்லது அமைச்சரின் கீழ் தனிப்பட்ட மாவட்ட திட்ட குழுவினை உருவாக்க பரிந்துரை செய்தது.

- ❖ மாவட்ட அளவில் அனைத்து மேம்பாட்டு மற்றும் திட்டமிடல் பணிகளை மாவட்ட ஆட்சியர் ஒருங்கிணைக்க வேண்டும் என பரிந்துரை செய்தது.

**ஜி.வி.கே. ராவ் குழு, 1985:**

- ❖ ஜி.வி.கே. ராவ் குழு – கிராமப்புற மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்புத்திட்டங்களுக்கான நிர்வாக ஆய்வுக்குழு

**ஜி.வி.கே. ராவ் குழவின் பரிந்துரைகள்**

- ❖ சமூக மேம்பாட்டு செயல்முறையானது, படிப்படியாக அதிகாரமயமாக்கப்பட்டு பஞ்சாயத்து அமைப்புகளிலிருந்து முற்றிலுமாக விலக்கப்பட்டது என்ற முடிவுக்கு இக்குழு வந்தது. மக்களாட்சி மயமாக்கலுக்கு பதிலாக நிகழ்த்தப்படட அதிகாரத்துவமயமாக்கலினால் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் பலவீனமாக்கப்பட்டு 'வேரில்லாத புல்' என்று அழைக்கப்பட்டன.

- ❖ மாவட்ட வளர்ச்சி ஆணையர் (District Development Commissioner) என்ற புதிய பதவி உருவாக்கப்பட வேண்டும். இந்த ஆணையர் மாவட்ட மன்றத்தின் ஆட்சித் தலைவராகச் செயல்படுவார்.

**எல்.எம். சிங்வி குழு, 1986**

- ❖ 1986 ஜுன் மாதம் ராஜீவ் காந்தி அரசாங்கத்தினால் எல்.எம்.சிங்வி தலைமையில் எட்டு உறுப்பினர் கொண்ட குழு மக்களாட்சி மற்றும் மேம்பாட்டிற்காக பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு மறு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டது.

**எல்.எம். சிங்வி குழுவின் பரிந்துரைகள்**

- ❖ பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.
- ❖ சுதந்திரமான நியாயமான மற்றும் வழக்கமான தேர்தலை பஞ்சாயத்து ராஜ் உறுப்புகளுக்கு நடத்த அரசியலமைப்பில் வழிவகை செய்ய வேண்டும்.

**துங்கோன் குழு**

- ❖ 1988ஆம் ஆண்டு பி.கே. துங்கோன் தலைமையில் ஒரு பாராளுமன்ற பரிந்துரைக்கான துணைக்குழு அமைக்கப்பட்டது. மாவட்ட திட்டமிடுதலுக்காக மாவட்டத்தின் அரசியல் மற்றும் நிர்வாக கட்டமைப்புகளை ஆய்வு செய்ய இக்குழு ஏற்படுத்தப்பட்டது.

**கட்கில் குழு**

❖ 1988ஆம் ஆண்டு வி.என்.கட்கில் தலைமையில் கொள்கை மற்றும் திட்டமிடலுக்கான ஒரு குழவை காங்கிரஸ் கட்சி நிறமித்தது.

**அரசியலமைப்பு அங்கீகாரம்**

**ராஜிவ் காந்தி அரசாங்கம்**

❖ ராஜீவ்காந்தி பிரதமராய் இருந்த காலத்தில் 64வது மற்றும் 65வது அரசியலமைப்பு சட்ட திருத்தம் தயாரிக்கப்பட்டு மக்களவையில் கொண்டுவரப்பட்டது.

❖ 1989 அக்டோபரில் ராஜ்ய சபையில் நிறைவேற்றப்படவில்லை.

**நரசிம்ம ராவ் அரசாங்கம்**

❖ நரசிம்ம ராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம் பஞ்சாயத்து அமைப்புகளை அரசிலயலமைப்பில் அங்கீகரிப்பதற்கான மசோதாவை மீண்டும் கொண்டு வந்தார். இதுவே 73வது அரசியலமைப்பு திருத்த சட்டம் ஆகிற்று. இது ஏப்ரல் 24 1993 முதல் நடைமுறைக்கு வந்தது.

**73வது அரசியலமைப்பு திருத்தச் (1992) சட்டம்**

- பகுதி ஒன்பது (Part – IX) இணைக்கப்பட்டது.
- மேலும் பஞ்சாயத்து ராஜ் எனும் தலைப்பில் சரத்துக்கள் 243 முதல் 243-O வரை 16 சரத்துக்கள் இணைக்கப்பட்டன.
- 11வது அட்டவணையில் 29 துறைகள் (Functional items போன்றவைகளும் இணைக்கப்பட்டது சரத்து (243-G)

| **ஊராட்சி அமைப்புகள் (சரத்து 243 முதல் 243(o) வரை** | |
|---|---|
| சரத்து 243 | ஊராட்சி அமைப்புகள் பற்றிய வரையறை. |
| சரத்து 243(A) | கிராம சபை |
| சரத்து 243(B) | ஊராட்சியின் அமைப்பு |
| சரத்து 243(C) | ஊராட்சி அமைப்பின் உறுப்பினர்கள் |
| சரத்து 243(D) | ஊராட்சி அமைப்புகளின் இட ஒதுக்கீடு |
| சரத்து 243(E) | ஊராட்சி அமைப்புகளின் பதவிக்காலம் |
| சரத்து 243(F) | ஊராட்சி அமைப்ப உறுப்பினர்களின் தகுதியிழப்பு |
| சரத்து 243(G) | ஊராட்சி அமைப்புகளின் அதிகாரம் மற்றும் பொறுப்புகள் |
| சரத்து 243(H) | ஊராட்சி அமைப்புகளின் வரிவிதிக்கும் அதிகாரம் மற்றும் நிதிகள் |
| சரத்து 243(I) | நிதி ஆணையத்தின் அமைப்பு. |
| சரத்து 243(J) | ஊராட்சி அமைப்பின் தணிக்கை கணக்குகள். |
| சரத்து 243(K) | ஊராட்சி அமைப்பின் தேர்தல் முறை. |
| சரத்து 243(L) | யூனியன் பிரதேசத்திற்கு ஊராட்சி அமைப்பது |
| சரத்து 243(M) | ஊராட்சிக்குள் அடங்காத சில பகுதிகள் |
| சரத்து 243(N) | ஏற்கனவே நடைமுறையில் உள்ள சட்டங்களின் தொடர்ச்சி |

| சரத்து 243(O) | ஊராட்சி தேர்தல் விவகாரங்களில் நீதிமன்ற குறுக்கீட்டிற்கான தடை |
|---|---|

**சிறப்பம்சங்கள்**

1. **சரத்து 243A - கிராம சபை**

- கிராம சபை என்பது அப்பகுதியில் உள்ள பதிவு பெற்ற அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கியது.
- கிராம அளவில் பஞ்சாயத்துகுட்பட்ட பகுதியில் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைவரையும் அடக்கியதே கிராம சபையாகும்.

2. **சரத்து 243B - பஞ்சாயத்தின் அமைப்பு**

- மூன்றடுக்கு பஞ்சாயத்து முறையினை கூறுகிறது.
- 20 இலட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட மாநிலங்களில் இடைநிலை பஞ்சாயத்து அமைப்புகளை அமைப்பது கட்டாயம் இல்லை.

3. **சரத்து 243C - உறுப்பினர் மற்றும் தலைவருக்கான தேர்த்தெடுக்கும் முறை:**

- கிராம இடைநிலை மற்றும் மாவட்ட அளவில் உள்ள அனைத்து பஞ்சாயத்து அமைப்புகளின் உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாநில அரசின் முடிவுக்கேற்ப, மாவட்ட மற்றும் இடைநிலை அளவில் உள்ள பஞ்சாயத்து அமைப்பின் தலைவர்கள் மறைமுகமாகவும் கிராம பஞ்சாயத்து தலைவர் நேரடியாகவும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

4. **சரத்து 243D - இட ஒதுக்கீடு:**

- ஒவ்வொரு பஞ்சாயத்து அமைப்பிலும் (மூன்று நிலைகளிலும்) பட்டியலினத்தோர் மற்றும் பழங்குடியினருக்கு அவர்களின் மக்கள்தொகை விகிதத்தைப் பொறுத்து இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.
- மொத்த இடங்களின் எண்ணிக்கையில் 1/3 க்கு குறையாமல் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

5. **சரத்து 243E - ஊராட்சி அமைப்பின் பதவிக்காலம் 5 வருடம்**

6. **சரத்து 243 H வரிவிதிக்கும் அதிகாரம்**

❖ மாநில சட்டமன்றம் வரி, சுங்கம் மற்றும் கட்டணங்களை விதித்து பயன்படுத்திக் கொள்ள ஊராட்சிகளுக்கு அதிகாரமளிக்கலாம்.

7. **சரத்து 243I - மாநில நிதிக்குழு**

- உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை மாநில ஆளுநரால் நியமிக்கப்படுகிறது.

❖ **சரத்து 243K - மாநில தேர்தல் ஆணையம்**

- உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு மாநில தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. மாநில தேர்தல் ஆணையர், ஆளுநரால் நியமிக்கப்படுவார்.

**(PESA Act of 1996) பஞ்சாயத்து சட்டம் (ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கு நீட்டிப்பு) 1996.**

❖ சரத்து 243M - ஊராட்சிக்குள் அடங்காத சில பகுதிகள்: நாகாலாந்து, மேகாலயா, மிசோரம் மற்றும் சில பகுதிகளுக்கு பஞ்சாயத்து ராஜ் சட்டம் செல்லாது.

❖ அரசியலமைப்பில் பகுதி IXல் கூறப்பட்டுள்ள பஞ்சாயத்து முறையானது 5வது அட்டவணையில் கூறப்பட்டுள்ள பத்து மாநிலங்களுக்கு பகுதிகளுக்கு பொருந்தாது. அவை ஆந்திரபிரதேசம், சத்தீஸ்கர், குஜராத், இமாச்சல பிரதேசம், ஜார்கண்ட், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், ஒடிசா, இராஜஸ்தான் மற்றும் தெலுங்கானா.

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்**

❖ இந்தியாவில் நகர்ப்புற உள்ளாட்சி என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் நகர்ப்புறத்தை நிர்வகிப்பதைக் குறிக்கிறது.

❖ இந்தியாவில் 8 விதமான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் இருக்கின்றன.

1. மாநகராட்சி (Municipal Corporation)
2. நகராட்சி (Municipality)
3. நகர்ப்புறக் குழு (Town Area Committee)
4. அறிவிக்கப்பட்ட பகுதிக் குழு (Notified Area Committee)
5. படைவீரர் குடியிருப்புக் குழு (Cantonment Board)
6. நகரியம் (Township)
7. துறைமுகப் பகுதி (Port Trust)
8. சிறப்பு நோக்கு முகமை (Special Purpose Agency)

❖ 74வது அரசியலமைப்பு திருத்த சட்டப்படி நகராட்சி அமைப்புகளுக்கு அரசியலமைப்பு ரீதியான அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

❖ 74 அரசியலமைப்பு திருத்த சட்டம் 1.6.1993 ல் நடைமுறைக்கு வந்தது.

❖ நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பின்வரும் மூன்று அமைச்சகங்களால் நிர்வகிக்கப்படுகிறது.

i. 1985ஆம் ஆண்டு தனி அமைச்சகமாக உருவாக்கப்பட்ட நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்
ii. படைவீரர் குடியிருப்புப் பகுதிகளுக்காக பாதுகாப்பு அமைச்சகம்
iii. ஒன்றிய பிரதேசங்களுக்காக உள்துறை அமைச்சகம்

**74வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம். 1992**

- ❖ நகராட்சிகள் என்ற தலைப்பில் பகுதி IX-A இணைக்கப்பட்டது.
- ❖ சரத்து 243 P முதல் 243ZG வரை இணைப்பு
- ❖ 12வது அட்டவணையில் 18 துறைகள் (functional items) போன்றவைகளும் இணைக்கப்பட்டது. (சரத்து 243W)

| நகராட்சி அமைப்பகள் (சரத்து 243(P) முதல் 243(ZG) வரை) | |
|---|---|
| சரத்து 243(P) | நகராட்சி அமைப்பின் வரையறை |
| சரத்து 243(Q) | நகராட்சிக்கான அமைப்பு |
| சரத்து 243(R) | நகராட்சி உறுப்பினர்கள் |
| சரத்து 243(S) | வார்டு குழு |
| சரத்து 243(T) | இட ஒதுக்கீடு. |
| சரத்து 243(U) | நகராட்சி அமைப்புகளின் பதவிக்காலம். |
| சரத்து 243(V) | உறுப்பினர்களின் தகுதி இழப்பு. |
| சரத்து 243(W) | நகராட்சி அமைப்பின் அதிகாரம் மற்றும் பொறுப்புகள். |
| சரத்து 243(X) | நகராட்சியின் வரி விதிக்கும் அதிகாரம் மற்றும் நிதிகள். |
| சரத்து 243(Y) | நிதி ஆணையம். |
| சரத்து 243(Z) | நகராட்சியின் தணிக்கை கணக்குகள். |
| சரத்து 243(ZA) | நகராட்சியின் தேர்தல் பற்றியது. |
| சரத்து 243(ZB) | யூனியன் பிரதேசங்களுக்கான நகராட்சி அமைப்பு பற்றியது. |
| சரத்து 2243(ZC) | சில ஆட்சிப் பகுதிகளுக்கு பொருந்தாதது. |
| சரத்து 243(ZD) | மாவட்டத் திட்டக்குழு. |
| சரத்து 243(ZE) | பெருநகரத் திட்டக்குழு. |
| சரத்து 243(ZF) | நகராட்சி அமைப்புகளுக்கு ஏற்கனவே உள்ள சட்டங்களின் தொடர்ச்சி. |
| சரத்து 243(ZG) | தேர்தல் விவகாரங்களில் நீதிமன்ற குறுக்கீட்டிற்கான தடை |

**சிறப்பம்சங்கள்:**

❖ சரத்து 243Q - நகராட்சியின் அமைப்பு
மூன்று வகையான நகராட்சிகள் உள்ளன.

1. நகர பஞ்சாயத்து – கிராமத்திலிருந்து நகரமாக மாறக்கூடிய ஒரு பகுதி
2. நகராட்சி – சிறிய நகர்புற பகுதி
3. மாநகராட்சி – பெரிய நகர்புற பகுதி

❖ சரத்து 243R - நகராட்சிகளின் கட்டமைப்பு: நகராட்சியில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் நேரடி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

❖ சரத்து 243S - வார்டு குழு: 3 லட்சம் (அ) அதற்கு மேற்பட்ட மக்களை உடைய நகராட்சி யில் உள்ள 2 (அ) அதற்கு மேற்பட்ட வார்டுகளுக்கு, ஒரு வார்டு குழு அமைக்கப்பட வேண்டும்.

❖ சரத்து 243T - இட ஒதுக்கீடு: ஒவ்வொரு நகராட்சியிலும் உள்ள இடங்களில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடி மக்களுக்கு அம்மக்கள் தொகையின் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க வேண்டும். அவ்வாறு ஒதுக்கப்பட்ட இடங்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

❖ சரத்து 243U - நகராட்சிகளின் பதவிக்காலம் - 5 வருடம்

❖ சரத்து 243 Y - மாநில நிதிக்குழு: பஞ்சாயத்துகளுக்காக அமைக்கப்பட்ட மாநில நிதி ஆணையம், ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை அமைக்கப்பட்டு நகராட்சிகளின் நிதி நிலையை ஆய்வு செய்து ஆளுநருக்கு அறிக்கை தாக்கல் செய்யும்.

❖ சரத்து 243ZA - மாநில தேர்தல் ஆணையம்: வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பது மற்றும் நகராட்சிகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கான மேற்பார்வை, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாடு ஆகியவை மாநிலத் தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

❖ சரத்து 243ZD - மாவட்டத் திட்டக்குழு: ஒவ்வொரு மாநிலமும் மாவட்ட அளவில், மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகள் மூலம் தயாரிக்கப்பட்ட திட்டங்களை ஒருங்கிணைத்து, மாவட்டம் முழுவதற்கும் ஒரு வரைவு மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரிக்க, மாவட்ட திட்டக் குழுவை அமைக்க வேண்டும்.

❖ சரத்து 243ZE - பெருநகர திட்டக்குழு: ஒவ்வொரு பெருநகரப் பகுதியிலும் ஒரு வரைவு மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரிக்க பெருநகர திட்டமிடல் குழு இருக்க வேண்டும் (பெருநகரப் பகுதி என்பது 10 லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட பகுதி)

**நகர்ப்புற அரசாங்கங்களின் வகைகள்**

**1. மாநகராட்சி**

பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட பெரிய நகரங்களின் நிர்வாகத்திற்காக மாநகராட்சிகள் உருவாக்கப்பட்டன. ஒரு மாநகராட்சியானது, மன்றம் (கவுன்சில்), நிலைக்குழுக்கள் மற்றும் ஆணையர் என மூன்று அங்கங்களைக் கொண்டுள்ளது.

மன்றம் என்பது மேயர் தலைமையிலான மாநகராட்சியின் சட்டமன்றப் பிரிவாகும். அவருக்கு துணை மேயர் ஒருவர் உதவியாக இருப்பார். இந்தியாவில் ஒரு நகரத்தின் முதல் குடிமகன் மேயர் ஆவார்.
மன்றம் மற்றும் அதன் நிலைக்குழுக்கள் எடுக்கும் முடிவுகளை செயல்படுத்துவது மாநகராட்சி ஆணையரின் பொறுப்பாகும்.

**2. நகராட்சி**

பேரூர்கள் மற்றும் சிறிய நகரங்களின் நிர்வாகத்திற்காக நகராட்சிகள் நிறுவப்பட்டுள்ளன. அவை பல்வேறு பெயர்களால் அறியப்படுகின்றன. தமிழகத்தின் முதல் நகராட்சி வாலாஜாபேட்டை நகராட்சி ஆகும்.

### 3. அறிவிக்கப்பட்ட பகுதி குழு

இரண்டு வகையான பகுதிகளின் நிர்வாகத்திற்காக அறிவிக்கப்பட்ட பகுதிக் குழு உருவாக்கப்பட்டது – தொழில்மயமாக்கல் காரணமாக வேகமாக வளர்ச்சியடையும் நகரம் மற்றும் நகராட்சியாக அறிவிக்கப்படுவதற்கு தேவையான அனைத்து நிபந்தனைகளையும் இன்னும் பூர்த்தி செய்யாத நகரம். அறிவிக்கப்பட்ட பகுதிக் குழுவின் தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களும் மாநில அரசால் நியமிக்கப்படுவர்.

### 4. நகர்ப்புறக் குழு

சிறிய நகரங்களின் நிர்வாகத்திற்காக நகர்ப்புறக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது மாநில சட்டமன்றத்தின் தனிச் சட்டத்தால் உருவாக்கப்படுகிறது.

### 5. படைவீரர் குடியிருப்புக் குழு (கன்டோன்மென்ட்)

இராணுவ பகுதியில் உள்ள பொதுமக்களின் நகராட்சி நிர்வாகத்திற்காக படைவீரர் குடியிருப்புக் குழு நிறுவப்பட்டுள்ளது. இது 2006 ஆம் ஆண்டு, மத்திய அரசால் இயற்றப்பட்ட கண்டோன்மென்ட் சட்டத்தின் விதிகளின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது (2019), இந்தியாவில் 62 படைவீரர் குடியிருப்பு பகுதிகள் உள்ளன. மக்கள் தொகை அடிப்படையில் அவை நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

படைவீரர் குடியிருப்புக் குழுவானது, பகுதியளவு தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் பகுதியளவு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். இராணுவக் கூடத்தின் தலைமை இராணுவ அதிகாரி, குழுவின் பதவி வழி தலைவராக அதன் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவார். படைவீரர் குடியிருப்புக் குழுவின் நிர்வாக அதிகாரி, இந்திய குடியரசு தலைவரால் நியமிக்கப்படுவார்.

**கண்டோன்மென்ட் வாரியங்களின் வகைப்பாடு**

| வகை | மக்கள் தொகை |
|---|---|
| I. | 50,000க்கு மேல் |
| II. | 10,000 முதல் 50,000 வரை |
| III. | 2,500 முதல் 10,000 வரை |
| IV. | 2500க்கு கீழே |

### 6. நகரியம்

பெரிய பொது நிறுவனங்களால் அதன் அருகில் வசிக்கும் அதன் ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு குடிமை வசதிகளை வழங்குவதற்காக நிறுவப்பட்ட நகர்ப்புற அரசாகும். நுகர நிர்வாகத்தை கவனிப்பதற்காக ஒரு நகர நிர்வாகியை அப்பொதுத்துறை நிறுவனமே நியமிக்கிறது.

### 7. துறைமுக நிர்வாக பகுதிகள்

துறைமுக நிர்வாக பகுதிகள் இரண்டு நோக்கங்களுக்காக மும்பை, கொல்கத்தா மற்றும் சென்னை போன்ற துறைமுகப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன:

(அ) துறைமுகங்களை நிர்வகிப்பது மற்றும் பாதுகாப்பது மற்றும்
(ஆ) அப்பகுதி மக்களுக்கு குடிமை வசதிகளை வழங்குதல்.

இது தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அதன் தலைவர் ஒரு அதிகாரி.

**8. சிறப்பு நோக்க முகமைகள்**

இந்த ஏழு பகுதி அடிப்படையிலான நகர்ப்புற அமைப்புகளுக்குக் கூடுதலாக, மாநிலங்களால் குறிப்பிடப்பட்ட செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக சில நிறுவனங்களை அமைக்கப்பட்டுள்ளன. அவை 'ஒரே நோக்க' அல்லது 'சிறப்பு நோக்க' முகமைகள் அல்லது 'செயல்பாட்டு உள்ளாட்சி அமைப்புகள்' என அறியப்படுகின்றன. அவை தன்னாட்சி அமைப்புகளாக செயல்படுகின்றன.

**உள்ளாட்சி அரசாங்கத்திற்கான மத்திய குழு**

உள்ளாட்சி அரசாங்கத்திற்கான மத்திய குழு, 1954 இல் அமைக்கப்பட்டது. இது இந்தியக் குடியரசுத் தலைவரின் உத்தரவின்படி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 263 ன் கீழ் உருவாக்கப்பட்டது.

1958 வரை, இது நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி விவகாரங்களைக் கையாண்டது, ஆனால் 1958 க்குப் பிறகு நகர்ப்புற உள்ளாட்சி விவகாரங்களை மட்டுமே கையாள்கிறது. இது ஒரு ஆலொசனை வழங்கும் அமைப்பாகும். மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சர் இதன் தலைவராக செயல்படுகிறார்.

**தமிழ்நாட்டில் பஞ்சாயத்து ராஜ்**

**கிராம அமைப்புகள் தொடர்பான தமிழ்நாடு அரசினால் நியமிக்கப்பட்ட குழுக்கள்**

1. L.C. ஜெய்ன் குழு (1996)
2. கோ.சி. மணி குழு (1997)
3. மு.க. ஸ்டாலின் குழு (2007)

**தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம், 1994 - முக்கிய அம்சங்கள்:**

❖ **மூன்று அடுக்கு பஞ்சாயத்து அமைப்பு**

- கிராம பஞ்சாயத்து - President
- ஊராட்சி ஒன்றியம் - Chairman
- மாவட்ட பஞ்சாயத்து -Chairman

❖ **மூன்று அடுக்கு நகராட்சி அமைப்பு:**

- பேரூராட்சி - Chairman
- நகராட்சி அல்லது மாநகர சபை - Chairman
- மாநகராட்சி - Mayor

❖ **கிராம சபை கூட்டங்கள் - வருடத்திற்கு ஆறு முறை**

- குடியரசு தினம் (ஜனவரி 26)
- உலக தண்ணீர் தினம் (மார்ச் 22)
- தொழிலாளர் தினம் (மே 1)

- சுதந்திர தினம் (ஆகஸ்ட் 15)
- காந்தி பிறந்த தினம் (அக்டோபர் 2)
- உள்ளாட்சி தினம் (நவம்பர் 1)

❖ மாவட்ட திட்ட குழு: மாவட்ட பஞ்சாயத்து அமைப்பின் தலைவர் மாவட்ட திட்ட குழுவின் தலைவர் ஆவார். மாவட்ட ஆட்சி தலைவர் மாவட்ட திட்டக் குழுவின் துணைத்தலைவர் ஆவார்.

❖ கிராம பஞ்சாயத்தால் விதிக்கப்படும் வரிகள்:
வீட்டு வரி, வாகன வரி, கேளிக்கை வரி, நிலவரி, தண்ணீர் வரி.

**தமிழ்நாட்டில் நகராட்சி நிர்வாகம்:**

- முதல் நகராட்சி அரசாங்கம் மெட்ராசில் அறிமுகப்படுத்தப்பட்டது. மெட்ராஸ் மாநகராட்சி 1688இல் உருவாக்கப்பட்டது.
- நகராட்சி அமைப்பானது முதன் முதலில் மெட்ராஸில் 1688ல் ஏற்படுத்தப்பட்டது. நாதானியேல் ஹக்கின்ஸன் மெட்ராஸின் முதல் மேயர் ஆவார்.

**முக்கிய சட்டங்கள்**

- மெட்ராஸ் மாவட்ட நகராட்சி சட்டம் 1919 – 1920. இச்சட்டம் 1930 திருத்தப்பட்டு சிறுபான்மையினர் மற்றும் பெண்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட்டது.

- தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் (திருத்தம்) சட்டம், 2016
உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (நான்காவது திருத்தம்) மசோதா, 2018 மற்றும் தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டம் (இரண்டாவது திருத்தம்) மசோதா, 2018
நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சிறப்பு அதிகாரிகளின் பதவிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்க முன்மொழியப்பட்டது.

**தகவல்கள்**

- இந்தியாவில் மொத்தம் 2.5 இலட்சம் கிராம ஊராட்சிகள் உள்ளன. (2011 மக்கள்தொகை கணக்கெடுப்பு)
- தேசிய ஊராட்சி தினம், 24 ஏப்ரல் அன்று கொண்டாடப்படுகிறது.

**தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகள்**

| | |
|---|---|
| மாநகராட்சிகள் | 21 |
| நகராட்சிகள் | 138 |
| பேரூராட்சிகள் | 490 |
| மாவட்ட ஊராட்சிகள் | 31 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 388 |
| ஊராட்சிகள் | 12,525 |

APOLLO STUDY CENTRE

1. மாநகராட்சிகள்

**தமிழ்நாட்டின் சமீபத்திய மாநகராட்சிகள்**

| பெயர் | உருவாக்கம் | பெயர் | உருவாக்கம் |
|---|---|---|---|
| கும்பகோணம் | 20 டிசம்பர் 2021 | கடலூர் | 21 அக்டோபர் 2021 |
| தாம்பரம் | 3 நவம்பர் 2021 | கரூர் | 21 அக்டோபர் 2021 |
| சிவகாசி | 21 அக்டோபர் 2021 | காஞ்சிபுரம் | 21 அக்டோபர் 2021 |

2. நகராட்சிகள்

தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகள் அவற்றின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| வகைப்பாடு | ஆண்டு வருமானம் (கோடியில்) | எண்ணிக்கை |
|---|---|---|
| சிறப்பு தரம் | 15.00 க்கு மேல் | 12 |
| தேர்வு தரம் | 9.00 - 15.00 | 25 |
| முதல் தரம் | 6.00 - 9.00 | 31 |
| இரண்டாம் தரம் | 6.00க்குக் கீழே | 70 |
| | **மொத்தம்** | 138 |

3. பேரூராட்சிகள்

தமிழ்நாட்டில் உள்ள பேரூராட்சிகள் அவற்றின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன

| வகைப்பாடு | ஆண்டு வருமானம் | எண்ணிக்கை |
|---|---|---|
| சிறப்பு தரம் | ரூ.200 லட்சத்திற்கு மேலே | 47 |
| தேர்வு தரம் | ரூ.100 லட்சம் மற்றும் ரூ. 200 லட்சத்திற்குள் | 187 |
| முதல் தரம் | ரூ.50 லட்சம் மற்றும் ரூ. 100 லட்சத்திற்குள் | 194 |
| இரண்டாம் தரம் | ரூ.50 லட்சத்திற்குகே கீழே | 62 |
| | **மொத்தம்** | 490 |

APOLLO STUDY CENTRE